

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி அமைப்பாளரும், முன்னாள் செங்கம் ஒன்றியச் செயலாளருமான மறைந்த ப.அண்ணாமலை, அவரின் உடலுக்கு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன் மற்றும் இரா.ஸ்ரீதரன், எஸ்.பன்னீர்செல்வம், ப.கார்த்திவேல்மாறன், பிரியா ப.விஜயரங்கன், அருணை வெங்கட், த.செந்தில்குமார் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு சட்டமன்றத் தொகுதி ஆற்காடு நகரம், ஆற்காடு கிழக்கு ஒன்றியம் பகுதிகளில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாளை முன்னிட்டு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி கலந்து கொண்டு அசைவ உணவு வழங்கினார். இதில் மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, ஒன்றியச் செயலாளர் எம்.வி.பாண்டுரங்கன், நகரச் செயலாளர் ஏ.வி.சரவணன், ஆற்காடு ஒன்றியக் குழுத் தலைவர் புவனேஸ்வரி, சத்தியநாதன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் காந்திமதி பாண்டுரங்கன், நகர மன்ற துணைத் தலைவர் டாக்டர் பி.என்.எஸ்.பவளக்கொடி, சரவணன், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் பி.என்.எஸ்.சரவணன் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

# இளைஞர் எழுச்சி நாள் - மாணவர்களுக்கு இராஜபாளையம் தொகுதியில் நல உதவிகள்!

## இராசா அருண்மொழி வழங்கினார்!

இராஜபாளையம், நவ. 28-

இளைஞர் எழுச்சி நாளையொட்டி இராஜபாளையம் தொகுதியில் தமிழ்நாடு சீர்மரபினர் நல வாரிய துணைத் தலைவர் இராசா அருன்மொழி பள்ளி மாணவர்களுக்கு நல உதவிகளை வழங்கினார்.

இளம் தலைவர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, இளைஞர் எழுச்சி நாள் விழாவாக ராஜபாளையம் தொகுதி அயன் கொல்லம் கொண்டான் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள அயன் கொல்லம் கொண்டான் அரசு உயர்நிலைப்பள்ளி ராஜபாளையம் நகராட்சி தொடக்கப்பள்ளி பத்தாவது வார்டு படிக்கிற மாணவச் செல்வங்களுக்கு உணவு, இவற்றோடு முதலமைச்சர் துணை முதலமைச்சர் படம் பொறிக்கப்பட்ட எவர்சில்வர் தட்டு உள்ளிட்டவற்றை தமிழ்நாடு சீர்மரபினர் நல வாரிய துணை தலைவர் இராசா அருண்மொழி வழங்கினார்.





நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் தங்கபாண்டியன், நகர் மன்றத் தலைவர் பவித்ரா சியாம், நகர செயலாளர்கள் ராமமூர்த்தி, மணிகண்டராசா, முன்னாள் கூட்டுறவு ஸ்டோர் தலைவர் பாஸ்கர் ,சேத்தூர் சேர்மன் பாலசுப்பிரமணியன், ஒன்றிய துணை செயலாளர் ஜெயந்தி சுந்தர், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் முத்துச்செல்வி, முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் சிங்கர சிங்கராஜ், ஒன்றிய அவை தலைவர் மிசா நடராஜன் , முன்னாள் ஒன்றியதுணைத் தலைவர் கற்பகராஜ், நகர் கழக நிர்வாகிகள் ஒன்றிய கழக நிர்வாகிகள், மாவட்ட மகளிர் அணி சுமதி மாவட்ட சிறுபான்மை துணை அமைப்பாளர் இமாம் சார், மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் கருப்பழகு, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி மாரி முத்து, முன்னாள் நகர அவை தலைவர் பதிவு ஜமால்,

முன்னாள் நகர துணைச் செயலாளர் சரவணன், முன்னாள் மாவட்ட பிரதிநிதி செல்லச்சாமி, உதயா ரசிகர் மன்றம் ரைடர்ஸ் கிளப் தமிழ் கலைச்செல்வன், மாவட்ட வழக்கறிஞர் அணி கனகராஜ், நகர் மன்ற உறுப்பினர்கள் பாரத், பிளைவுட்ராஜ், ராணிப பாலா, சிங்கராஜ், ஷாலினி, அர்ச்சனா, வைரமுத்து, அருள், உதயா, முன்னாள் கவுன்சிலர் கமலநாதன், ஆர்டிஸ்ட் மூர்த்தி, குமார், சந்திரன், வார்டு செயலாளர் இளங்கோ, வார்டுநிர் வாகிகள் ரமேஷ், செல்வம், பெருமாள், உதயா நற்பணி மன்றம் முனிராஜ் , சேத்தூர் சக்திவேல், துரை, முருகன் உள்ளிட்ட உள்ளிட்ட ஏராளமான கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டார்கள்

# திராவிட இயக்கத்தின் நம்பிக்கை நட்சத்திரம்!

கழக வெள்ளி விழாவில் உதித்த உதயமே – கழக பவள விழாவின் இதயமே – அறிவு திருவிழாவில் வானமே – அஞ்சகத்த ஈன்றெடுத்த முத்தமிழ் அறிஞர் கலைஞரின் பெயரனே முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் உதயநிதியே



கழகம் எனும் கொள்கை படைக்கு தலைமை ஏற்க அர்ப்பணித்த துர்க்கை தாயின் தவப்புதல்வனே கோடிக்கணக்கான கழகத் தொண்டனின் இதய நாயகனே திராவிட இயக்கத்தின் நம்பிக்கை நட்சத்திரமாய் நாளை உலகை வழிநடத்த போகும் தமிழர் படைத்தலைவனே

அகநானூறு புறநானூறு இணைந்து புது திராவிட 400 படைக்கப் போகும் கலைஞரின் உதயநிதியே உனது ஒவ்வொரு பிறந்த நாளும் வரலாறு படைக்கும் பொன்னாளே

தந்தை பெரியாரும் நீயே, பேரறிஞர் அண்ணாவும் நீயே, முத்தமிழறிஞர் கலைஞரும் நீயே, பேராசிரியர் பெருந்தகையும் நீயே, இன்று நம்மை ஆளும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் மறு உருவமும் நீயே, நாளைய சமுதாயத்தை வழிநடத்த போகும் பேர் ஆளுமையும் நீயே, அறிவு திருவிழாவாய் ஆன்றோர் சான்றோர்களை எல்லாம் உயர்த்தி பெரு விழாவாக நடத்திக் காட்டிய கோடி இதயங்களின் கொள்கை நாயகன் நீயே

நூறாண்டு கடந்தும் வாழ்வாய் நீயே பகட்டான கொண்டாட்டங்களை தவிர்த்திடு கொள்கை பணியும் மக்கள் பணியும் ஆற்றிடு ஏழை எளிய மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட திருநங்கைகளையும் காத்திடு விளிம்பு நிலை சமூகத்தோடு ஒன்றி வாழ்ந்திடு அவர்களுக்கான உதவிகளை செய்திடு ஆங்காங்கே திட்டமிட்டு நடத்திடு அதுவே நமக்கு கூடுதல் மகிழ்ச்சி தரும் பிறந்தநாள் பரிசு

என்று உரைத்த திராவிடக் கருவூலமே இளைஞர் அணி கண்டறிந்த இருநூறுக்கும் அதிகமான இளம் பேச்சாளர்களை இயக்கத்திற்கு அளித்த இளைஞர் அணி சிகரமே சனாதன சங்கிகளின் சங்கருக்க வந்த இளம் பெரியாரே விளையாட்டுத் துறையில் குழந்தைகள் முதல் இளைஞர்கள் வரை ஒளிமயமான வாழ்வை உருவாக்கி இந்தியாவுக்கு முன்மாதிரியாக தமிழ்நாட்டை மாற்றி அமைக்கும் துணை முதல்வரே

சர்வாதிகார மேகம் நம் நாட்டை சூழ்ந்து வருகிறது அதனை கலைக்க போவதும் உதயசூரியன் தான் உழைத்திடு உடன் பிறப்பே எனது அடுத்த பிறந்த நாளிலும் நம் கழகத் தலைவரே முதலமைச்சராய் தொடர்வார் என சூளுரைத்த இதய சூரியனே முத்தமிழின் உதயமே உனது பிறந்தநாள் கழகத் தொண்டனுக்கு கலைஞரின் உதய நாள் வரலாறு படைக்கும் துணை முதல்வரே வாழ்க வாழ்கவே இளமையோடு நூறாண்டு



**டாக்டர் சந்திரபாபு**
பொருளாளர்
கழக தலைமை இலக்கிய அணி

